களஞ்சியம் - KALANJIYAM
INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

# சங்ககால சைவ வழிபாடு

**ப.குருமூர்த்தி, ஆய்வாளர் 204PHD23F733TAM,** கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி திருவண்ணாமலை – 606 603 Affliated to திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632115.

**முனைவர் ச.வைத்தீஸ்வரன்,** கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி திருவண்ணாமலை – 606 603 Affliated to திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632115.

# Saivism of the Sangha

**P.Gurumoorthy** Research Scholar (204PHD23F733TAM), Kalaignar Karunanithi Government Arts College, Thiruvannamalai 606603, Affiliated to Thiruvalluvar University, Serkkadu, Vellore - 632115

**Dr. S. Vaitheeswaran** Associate Professor, Kalaignar Karunanithi Government Arts College, Thiruvannamalai 606603, Affiliated to Thiruvalluvar University, Serkkadu, Vellore-632115

## Abstract

People live in different places in the world with their own language, customs and religious beliefs. Tamils are the oldest people in the world. Sangha literature helps a lot to know the history of Tamils. Saivism and Vaishnavism became the religion of Tamils. This review is intended to find and explain the influence of Saivism in the life of ancient Tamils through Sangha literature. Saivism is one of the oldest religions in the world. There are references to Saivism in the Vedas. Saivism was the dominant religion in the Indus Valley Civilization and most of India. Finding elements of Saivism in Sangam literature, which is the source of the life of Palantamizhar, this research paper explains that Saivism is the religion of Tamils and how it was formed.

**முன்னுரை**

உலகில் மனிதர்கள் பல்வேறு இடங்களில் தனக்கெனத் தனிமொழியும், பழக்க வழக்கமும், சமய நம்பிக்கையும் கொண்டு வாழ்கின்றனர். தமிழர்கள் உலகின் பழமையான தொல்குடிகளாவர்.தமிழரின் வரலாற்றை அறிய சங்க இலக்கியம் பெரிதும் துணைசெய்கின்றது. தமிழரின் சமயமாக சைவமும், வைணவமும் விளங்கின. பழந் தமிழர் வாழ்வில் சைவம் செல்வாக்குப் பெற்றிருந்ததைச் சங்க இலக்கியத்தின் வழி கண்டறிந்து விளக்கும் வகையில் இவ்வாய்வு அமைகின்றது.

சைவம் உலகின் பழமையான சமயங்களுள் ஒன்று. வேதங்களில் சைவசமயக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. சிந்துசமவெளி நாகரீகத்திலும் இந்தியாவின் பெரும்பான்மையான பகுதிகளிலும் பரவிய சமயமாக சைவசமயம் திகழ்கிறது. பழந்தமிழரின் வாழ்வியலுக்கு ஆதாரமான சங்க இலக்கியத்தில் சைவசமய கூறுகளைக் கண்டறிந்து, சைவம் தமிழரின் சமயம் என்றும், அது எவ்வகையில் அமைந்து இருந்தது என்றும், இவ்வாய்வு கட்டுரை விளக்குகிறது.

**சங்கத் தொகை நூல்களில் கடவுள் வாழ்த்து**

எட்டுத்தொகை நூல்களில் குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, கலித்தொகை, புறநானூறு ஆகியவற்றுக்குச் சிவபெருமான் கடவுள் வாழ்த்தும், நற்றிணை, பரிபாடலுக்குத் திருமால் கடவுள் வாழ்த்தும் அமைத்திருப்பதை நோக்கும்போது, தொகைநூல்களைத் தொகுத்தவர்களும் தொகுப்பித்தவர்களும் கடவுள் நம்பிக்கை உடையவர்கள் என்பது பெறப்படுகிறது. தொகுத்தவர்கள் புலவர்களாகவும் தொகுப்பித்தவர் பெரும்பாலும் அரசர்களாகவும் இருந்துள்ளனர். எனவே, சமயத்தின் அடிப்படைக் கொள்கையான இறைவனைப் போற்றுதல் சங்க இலக்கியத் தொகுப்புக் காலத்தில் இருந்தமை பெறப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் இயற்கை வழிபாடோ, அல்லது சிந்தாமணி அருக வழிபாடோ, திருக்குறளின் பொதுமை வழிபாடோ எல்லாம் சிவனையோ திருமாலையோ அல்லது முருகனையோ பெயர் குறிப்பிட்டு வழிபடுகின்ற வழக்கம் சங்க இலக்கியத் தொகுப்புக் காலத்தில் இருந்திருக்கிறது. சங்க இலக்கியத் தொகுப்புக்காலம் தெய்வங்களை வகைப்படுத்திக் கொண்டு அவற்றின் பெருமைகளைப் பேசுகின்ற கடவுள்நெறி நன்கு பரவிய காலமாகத் தெரிகிறது. அக்காலம் சங்ககாலத்திற்குப் பிற்பட்டதாக இருந்தாலும் சங்க இலக்கியத் தொகுப்பு கடவுட்கொள்கை சார்ந்தது என்பது உறுதியாகின்றது. தமிழரின் மாபு பண்டைக்காலத்தில் தெய்வ தம்பிக்கையோடுதான் இருந்தது என்பது இக்கடவுள் வாழ்த்துப் பாடல்களால் உறுதியாகின்றது.

திருமாலுக்குரிய வாழ்த்துப் பாடல்களைக் கொண்ட நற்றிணையையும், பரிபாடலையும் தவிர எஞ்சிய ஆறு பாடல்கள் சிவபெருமானுக்குரிய வாழ்த்துக்களைக் கொண்டதாகும். குறுந்தொகையில் உள்ள பாடல் முருகனைப் பற்றியதாக இருந்தாலும் சிவனும் முருகனும் வேறல்ல என்ற சைவ சமயக் கொள்கையின் அடிப்படையிலேயே பாடப்பெற்றிருக்கிறது. இந்த ஆறு பாடல்களில் பதிற்றுப்பத்துக்கு உரிய பாடலைப் பாடியவர் பெயர் தெரியவில்லை. கலித்தொகையில் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் கலித்தொகையைத் தொகுத்த நல்லந்துவனார் ஆவார், மேலும் இவரே நெய்தலில் 33 பாடல்களைப் பாடியுள்ளார்.கலித்தொகை நூலைப் பாடிய காலத்தில் இவர் கடவுள் வாழ்த்து பாடலைப் பாடியிருக்கலாம். மற்ற ஐந்து கடவுள் வாழ்த்துப் பாடல்களையும் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார். பெருந்தேவனார் என்பது சிவனைக் குறிக்கும் பெயராகும்.

## கடவுள் தத்துவம்

உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதது நிலம். இது உலகு என்றும் வழங்கப்படும். இவ்வுண்மையை "காடுறை உலகமும்" "மெய்வரை உலகமும்" "தீம்புனல் உலகமும்" "பெருமணல் உலகமும்" என்று தொல்காப்பியம்[1] கூறுவதன் மூலம் புலப்படும். உலகம் என்பது ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு மனிதன் வரை வாழ சில அடிப்படையான அல்லது இயற்கையான பொருள்களை கொண்டுள்ளது. அவை நிலம் தீ நீர் காற்று விண் என்ற ஐம்பெரும் பொருள்களாகும். இவ் வுண்மையை

"நிலம்தீ நீர்வலி விசும்பொ டைந்துங்
கலந்த மயக்கம் உலகம்"

எனவரும் தொல்காப்பியத்தால்[2] பெறப்படும். மொழிக்கு முதற்காரணம் ஒலி, எழுத்து, சொல் என்றால் உலக உயிர்களின் தோற்றத்திற்கு முதற்காரணம் யார்? இதற்கு விடையாக முதற்கண் முனைவன், கடவுள், வழிபடு தெய்வம்[3], நெடியோன்[4], முழு முதல்வன்[5], ஆதி பகவன்[6] ஆகிய சொற்களின் பொருட்தன்மையை காண்போம். முனைவன் என்பதையும் முன்னவன் அல்லது கருத்தா என்பதையும் கடவுள் என்பது கடந்த உட்பொருள் அல்லது கடந்த அப்பொருளாய் உள்ளவன் என்பதையும், வழிபடு தெய்வம் என்பது வழிபடுதற்குரிய தெய்வம் அல்லது வழிவழியாய் வணங்கும் தெய்வம் என்றும், நெடியோன் என்பது பெரியோன் அல்லது உயர்ந்தவன் என்றும், முழு முதல்வன் என்பது முதிய முதல் கடவுள் அல்லது முதுபெருந் தெய்வம் என்றும், ஆதி பகவன் என்பது முதற்காரணன் அல்லது தொன்மை புகழுடையவன் என்றும் பலவாறு பொருள்படக் காண்கிறோம்.

மேற்கூறியவற்றால் மொழிக்கு ஒலி காரணமாக இருப்பது போல் உலக உயிர்களின் தோற்றத்திற்கு இன்னது இப்படிப்பட்டது என்று காட்ட முடியாத ஓர் உயிர்ப்பண்பு உயரிய பொருள் உண்டு என்று உணரலாம். விதையின்றி விளை வில்லை எனில் விதையை உண்டாக்கிய ஒருவன் உண்டன்றோ! விதையை உண்டாக்க ஒருவன் இருப்பது போல் உலக படைப்பிற்கு ஒருவன் இருக்க வேண்டும் என்பது உண்மை யன்றோ?

## திருக்கோயில்

தமிழினம் படைப்புக் காலந்தொட்டு இருந்துவரும் பழங்குடி ஆகும். தமிழர் கண்ட கோயில் வரலாறு கல்லாய் மனிதராய்த் தேவராய் வளர்ந்த வரலாறு ஆகும். கல்லை நட்டு தெய்வமாக்கி வணங்கும் "நடுகல்"[7] வழிபாடே வரலாற்றுத் தொன்மை சிறப்பு உடையது. தொல்காப்பியனார் காட்டும் நடுவில் வழிபாட்டின் முதிர்ச்சியைப் பொத்தியார் "நடுகல் ஆயினன் புரவலன்"[8] என்றும் ஔவையார் "நடுகல் பீலி சூட்டி"[9] என்றும் சமுதாய வாழ்வில் காட்டுவர். நடுகல் வரலாற்றில் காணும் பெரும்படை, வாழ்த்தல் என்னும் பகுதிகள் வாழ்ந்து மறைந்தவரின் புகழைப் பொறித்த இடமாய், தெய்வக் கோயிலாய் அமையுமாற்றை அணுகுவோர்க்கு உணர்த்தும் உருவும் திருவும் பொலியும் கோயில் வரலாற்றில் நடுகல் ஒரு வழிகாட்டி. அது ஒரு காலக் கண்ணாடியுமன்றோ!

திருக்கோயில்கள் சங்ககாலத்தில் இருந்தன அக்கோயில்களுக்கு மக்கள் சென்று வழிபட்டனர் அவற்றுள் சிவனை வலம் வந்து வழிபட்ட கோயில் காட்சியை "முக்கண்

செல்வர் நகர்வலஞ் செய்து"[10] என்று காரிகிழார் கூறியுள்ளார். கடவுளுக்கு மலர் இட்டு வழிபடும் மரபினை

"புல்லிலை யெருக்க மாயிலுமுடையவை
கடவுள் பேணா மென்னா" [11]

எனக் கபிலர் காட்டுவர். மேலும் மக்களையும் கோயிலையும் பிரிக்க முடியாது என்பது "கோயிலோடு குடி நிறிஇ"[12] எனப் பட்டினப்பாலையில் உருத்திரங்கண்ணனார் கூறுமாற்றால் தெரிகிறது. இதனால் உருத்திரங்கண்ணனார் போற்றும் கரிகாற் சோழன் கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற வழங்குகிறது காரணமாயினர் போலும், இதன் பின்னர் வந்த இளங்கோவடிகள் "மறந்துறை விளங்கிய மன்னவன் கோயிலும் அறந்துறை விளங்கிய அந்தணர் பள்ளியும்"[13], இதன் பின்னர் வந்த ஔவையாரும் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று சங்க கால பண்பாட்டை இன்று வரை நாம் தொடர்கிறோம்.

## தொல்காப்பியத்தில் சிவன்

தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள இலக்கணம் உள்ளவற்றுக்கேயன்றி எக்காலத்திற்குமன்று. தொல்காப்பியத்தில் சிவனைப் பற்றி குறிப்புகள் நானிலத் தெய்வங்களை போல் வெளிப்படையாகக் கூறப்படவில்லை மேலும் சிவன் என்னும் சொல்லால் சிவனைக் குறிக்கும் மரபும் தொல்காப்பியனார் காலத்தில்லை. இக்காரணம் பற்றியே சங்க நூல்களில் சிவன் என்ற சொல் இடம்பெறவில்லை. "கடி சொல் இல்லை காலத்துப் படினே"[14] என்று கூறும் தொல்காப்பியம் சிவன் என்ற சொல் வழக்கிற்கு வழிகாட்டுகிறது எனின் மறுப்பார் உண்டுகொல்!

சிவவழிபாடு, அன்பு மேலீட்டால் நன்றி பெருக்கால் பல உருவங்களில் வெளிப்படும். அவற்றில் ஒன்று ஒளி. தொல்காப்பியினர் காட்டும் கொடி நிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றனுள் கொடிநிலையும் வள்ளியும் ஒளி வழிபாடாகும். அவை முறையே ஞாயிற்றொளியாய், திங்கள் ஒளியாய் விளங்கும். இதற்கு எடுத்துக்காட்டாக இளங்கோவடிகள் "திங்களைப் போற்றுதும், ஞாயிறு போற்றுதும்"[15] எனக் கடவுள் வாழ்த்தாய்ப் போற்றுவது ஒளி வழிபாட்டின் பழமைச் சிறப்பைப் புலப்படுத்தும். மேலும் ஆதி பகலவன் என்ற தொடரமைப்பே ஆதி பகவன் என்று வள்ளுவரால் எடுத்தாளப் பட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

## சங்க நூல்களில் சிவ வழிபாடு தொன்மைச் சிறப்பு

சங்ககாலத்தில் உருவ வழிபாடும் விழாவும் நிகழ்ந்தன. "மேவிய சிறப்பின் ஏனோர் படிமையை"[16] என்ற அடிக்கு இளம்பூரணர் நால்வகை நிலத்தில் மக்களை அல்லாத தேவரது பூசையும் விழாவும் என்று உரை எழுதுவதால் மேற்கூறிய கருத்து ஒரோவழி உய்த்துணரலாம்.

ஆதி மனிதன் மிகக் கொடிய மிருகங்களிடையே வாழ்ந்த காலத்தில் தற்காப்பிற்காகப் பயன்படுத்திய கருவிகளுள் ஒன்று மழு இது கோடாரி, குந்தாலி, கனிச்சி என்றும் பெயர்பெறும் மனிதன் தன் வாழ்வில் பெற்ற அனுபவத்தைத் தன் படைப்பில் பொறித்தோ வடித்தோ இன்பம் கண்டான். மழுவை ஏந்திய சிவத் தெய்வம் "மழுவாள் நெடியோன்"[17] "கனிச்சியோன்"[18] எனப் பெயர் பெற்றது. மூன்று கண்களைப் பெற்ற மனிதன் பல்லூழிக் காலத்திற்கு முன் உண்டு என்று திரு கா.அப்பாதுரை

அவர்கள் குமரிக்கண்டம் என்ற நூலில் தெரிவித்துள்ளார்[19]. சிவனைச் சிறப்பிக்கும் "முக்கட் செல்வர்"[20] "முக்கண்ணான்"[21] "பிறை நுதல் விளங்கும் ஒரு கண்"[22] என வரும் பெயர்கள் நினைத்தற்குரியன. உறுதிக்கும் வன்மைக்கும் சான்றாக விளங்குவது ஆலமரம். இதனை ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்ற முதுமொழியால் அறிகிறோம். சிவ வழிபாடு பரந்து விரிந்து இருந்த ஆலமர நிழலில் நிகழ்ந்தது என்பது "ஆலமுற்றம்"[23] "ஆலமர்செல்வன்"[24] எனவரும் தொடர்கள் உணர்ந்தும். அதியமானை வாழ்த்தும் ஔவையார் சிவனைப் போல் நீண்ட நாள் புகழுடன் நிலைபெற்று வாழ்க என வாழ்த்துவதை "நீல மணி மிடற்று ஒருவன் போல மன்னுக பெரும நீயே"[25] என்ற அடிகளில் காணும் போது சிவன் ஒருவனே தெய்வம் என்ற நிலை பெற்ற கொள்கை ஓங்கி வளர்ந்ததை காண முடிகிறது. இது போன்று பல வந்துள்ளமை குறிப்பிடத்தக்கன. நீலக்கழுத்தை (மணிமிடறு) உடையவன் என்பது பிற உயிர்களைக் காக்கும் பொருட்டால் பெற்ற அறிகுறிப் பெயராகும், அதனால் சிவன் "காரி உண்டிக் கடவுள்"[26] என்ற பெயர் பெறுகிறான்.

உலக வாழ்வு ஆணும் பெண்ணும் பெறும் இல்வாழ்வாய் அமையுமானால் மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் என்ற உயிர்க் கொள்கையை வேறு எந்த ஒரு தெய்வமும் பெறாத ஈருடல் ஓருடல் (ஆர்த்தநாதீசர்) தத்துவத்தை "நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்"[27] "ஈர்ஞ்சடை அந்தணன் உமை"[28] பசுங்கட் கடவுள் எனக் கூறும் மாற்றால் அறிகிறோம். சிவன் அங்கெங்கெனாதபடி எல்லாத் திசைகளிலும் உள்ளான் என்பதை "எண் கையாய்"[29] என்னும் தொடர் விளக்கும். மேலும் சடையுடையவன் சடை முடி மேல் கங்கையைத் தாங்கியவன் பிறையை அணிந்தவன் கொன்றை மாலையைச் சூடியவன் எனப் போற்றுவதை நீள் நிமிர்சடை, அவிர் சடை, தாழ்ந்த சடை, ஈர்ஞ்சடை, தேறு நீர்சடை, பெருவாரி, சலதாரி, பிறை நுதல், இளம்பிறை நுதலன், வண்ண மார்பின் கொன்றை, கொன்றையும் பைந்தா ரகலத்தின் என வருவன வற்றால் தெரியவரும். தீமையை அழித்து உயிர்கட்குப் பாதுகாவலாய் உள்ளவன் என்பதைத் தீய மூன்று கோட்டைகளை உடையவரை அழித்தமையால் பெறப்படுகிறது.

"மூவெயில் உடற்றிப
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
அண்ணல்" [30]

"முக்கண்ணான் மூவெயில்"[31]

"மூவகை ஆரெயில் ஓரழல் அம்பின்
---அழல வெய்து"[32]

"மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வன்"[33] என வருவன குறிப்பிடத்தக்கன.

கூத்துக்கலை ஒரு பழங்கலையாகும். சமயத் தொடர்புடைய ஆடலாகவும் கருதப்படுகிறது. இக்கலைஞர்கள் கூத்தர், கோடியர் என பலவாறு அழைக்கப்படுவர். சிவன் ஆடும் பழங்கூத்து கொடுகொட்டி எனப் பெயர் பெறுகிறது. இக்கூத்து ஆயிரம் திரு க்குறிப்புகளைப் பல உருவத்தால் புலப்படுத்தும் சிறப்பு உடையது. அசுரர்களின் முப்புரங்களை அழித்து ஆடிய கூத்து பாண்டுரங்கம் எனப்படும். கபாலம் ஏந்தி ஆடும் கூற்று கபாலம் எனப்படும். தீம்பால் தந்து உயிர் கட்டு நலவளம் நல்குவன ஆவினம். அவ் ஆவினமான நந்தியை ஊர்தியாகவும் கொடியாகவும் உடையவன் சிவன். "ஏற்றுவல னுயரிய மணிமிடற் றோனும்"[34] "வெள்ளேறு வல்வயி னுயரிய செல்வனும்"[35]

“புங்கவம் ஊர்வோன்”[36] என வரும் அடிகள் நந்தியைக் கொடியாகவும் ஊர்தியாகவும் கொண்டு விளங்கியதைப் புலப்படுத்தும்.

சிவனைப் போற்றும் மேற்கூறிய கருத்துக்களை சங்க நூல்கள் ஒன்றாகிய எட்டுத்தொகை நூல்களிலே பெரும்பாலும் இடம் பெற்றுள்ளன. இக்காரணம் பற்றியே எட்டுத்தொகையில் எட்டு நூல்களில் குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய ஐந்து நூல்கள் சிவனைப் போற்றும் கடவுள் வாழ்த்துப் பாடல்களால் சிறப்புறுகின்றன போலும்.

## முடிவுரை

சிவ வழிபாடு என்பது தமிழகத்தின் பழமையான மற்றும் தொன்மையான வழிபாடு ஆகும். சைவ சமய வழிபாட்டின் தெய்வமான சிவபெருமானின் உருவ அமைப்பினைக் கொண்டே இவற்றை அறியலாம், பழமையான மழு ஆயுதம், இயற்கை வழிபாட்டு நாகம், நிலவு, புலித் தோல் ஆடை, நந்தி வாகனம், கங்கை போன்று எல்லாமே பழமைக்கு பாலமாய் உள்ளது.பிறகு ஏன் சிவன் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் குறைவாக உள்ளது என்றால், சங்க இலக்கிய பாக்களின் விதிகளே இதற்க்கு காரணம். அக புற இலக்கியத்தில் எவை வரவேண்டும், எவை வரக்கூடாது என்று விதிகளை தாண்டியும், திணை, உரி, கருவையும், தலைவன் தலைவி என அகமாந்தர்களையும், புற பாட்டு பாத்திரங்களையும் மீறி சிவன் பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளதை வைத்தே சிவவழிபாடு தமிழகத்தின் பழமையான, நீக்கமுடியாத, பாண்பாடு தொடர்புடைய சமயம் என அறியமுடிகிறது.

## துணைநூற்பட்டியல் - References:

1.திருஞானசம்பந்தம், முனைவர்.ச.,தொல்காப்பியம் மூலமும் உரையும்,கதிர் பதிப்பகம்,திருவையாறு.
2.இராசமாணிக்கனார், முனைவர்,மா., பத்துப்பாட்டு ஆராய்ச்சி (மதுரைக்காஞ்சி) சாரதா பதிப்பகம்.
3. சோமசுந்தரனார்,பொ.வெ., புறநானூறு உரை, சைவசித்தார்ந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
4. சோமசுந்தரனார்,பொ.வெ., அகநானூறு உரை, சைவசித்தார்ந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
5.பரிமேழலகர்., திருக்குறள் உரை, சாரதா பதிப்பகம்.
6. இராசமாணிக்கனார், முனைவர்,மா., பத்துப்பாட்டு ஆராய்ச்சி (பட்டினப்பாலை) சாரதா பதிப்பகம்.
7.வேங்கடசாமி நாட்டார், ந.மு., சிலப்பதிகாரம், ராமையா பதிப்பகம்.
8.அப்பாத்துரை, கா., குமரிக்கண்டம், சாரதா பதிப்பகம்.
9.நச்சினார்கினியர்., கலித்தொகை உரை, நோபில் அச்சுக்கூடம்.
10.வையாபுரிப்பிள்ளை, ச., திருமுருகாற்றுப்படை, செந்தமிழ் இதழ் 1943.
11. பரிமேழலகர் .,பரிபாடல் உரை, டாக்டர் உ.வே.சா நூல் நிலையம்,சென்னை.
12.சோமசுந்தரனார்,பொ.வெ., ஐங்குறுநூறு உரை, சைவசித்தார்ந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.

**How to Cite**

ப.குருமூர்த்தி, & ச.வைத்தீஸ்வரன். (2024). சங்ககால சைவ வழிபாடு: Saivism of the Sangha. *KALANJIYAM - International Journal of Tamil Studies*, *3*(04), 172-185. https://ngmtamil.in/kalanjiyam-tamil/index.php/kalanjiyam/article/view/85

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Available at: https://ngmtamil.in/kalanjiyam-tamil/index.php/kalanjiyam/article/view/85